**21.08.2024 அ.வ.எண்.56/2015**

**பி.வா.சா.1, அப்துல் முணாப் த/பெ. சையத் ஜானி சாய்பு**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதிகளின் தந்தை அலி ஜான் சாய்பு இறந்து 50 வருடம் ஆகிறது என்றால் இருக்கலாம். அலி ஜான் சாய்பு இறந்தபோது குன்னா சாய்பு உயிருடன் இருந்தாரா என்ற விவரம் ஞாபகமில்லை. அலி ஜான் சாய்பு-ன் இறுதி சடங்கு வழக்கு சொத்தில்தான் நடந்தன என்பது சரிதான். அலி ஜான் சாய்பு இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் வழக்கு சொத்தில்தான் வசித்தனர் என்றால் அது விவரம் எனக்கு தெரியவில்லை. வாதிகளும் நான் உட்பட பிரதிவாதிகளும் வந்தவாசியில்தான் தொடர்ந்து வசிக்கிறோம் என்றால் ஆரம்பத்தில் அலி ஜான் சாய்பு-ம் காதர் அலியும் வழக்கு சொத்தில் வசித்தனர். வழக்கு சொத்தை என் தாயார் கிரயம் பெற்றபிறகு வாதிகள் வழக்கு சொத்தைவிட்டு வெளியில் வசிக்கின்றனர். வாதிகள் மருதாடு மற்றும் வழுவூர் ஆகிய ஊர்களில் வசிக்கின்றனர். நான் வாதிகள் மற்றும் இதர பிரதிவாதிகள் மீது மூன்று வழக்குகள் தாக்கல் செய்தேன். அவற்றில் இரண்டு வழக்குகள் தற்போதும் நிலுவையில் உள்ளன என்பது சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குகளில் இந்த வழக்கு வாதிகளின் முகவரியை வழக்கு சொத்து முகவரியை காட்டினேன் என்றும் அந்த முகவரிக்குதான் அழைப்பாணை சார்வானது என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக வாதிகளின் முகவரியை எனது வழக்குகளில் குறிப்பிட்ட விவரத்தை பொறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்பது சரியல்ல. குன்னா சாய்பு-ன் நேரடி வாரிசுகள் அனைவரிடமும் இருந்து என் தாயார் கிரயம் பெற்றார். என் தாயார் கிரயம் பெற்ற சொத்தை அப்படியே எனக்கு தானம் கொடுத்துவிட்டார். என் தாயார் குன்னா சாய்பு-ன் நேரடி வாரிசுகளிடமிருந்து இரண்டாவதாக கிரயப்பத்திரம் மூலம் சொத்து ஏதும் கிரயம் பெறவில்லை. நான் குன்னா சாய்பு-ன் வாரிசுகளிடமிருந்து சொத்து ஏதும் கிரயம் பெறவில்லை. என் தாயார் பெற்ற கிரயம் சொத்துகளை இரண்டு இனங்களாக காட்டி பெறப்பட்டது ஆகும். ஒரு இனச்சொத்து 9 அடி X 23-1/4 அடி மற்றும் மற்றொரு சொத்து 14 அடி X 115 அடி என்ற அளவுப்படி கிரயம் பெறப்பட்டது என்பது சரிதான். மொத்தம் 1819-1/4 அடி ஆகும். குன்னா சாய்புவிற்கு சொந்தமாக இருந்த 8-3/4 செண்ட்-ல் என் தாயார் 4 செண்ட் மட்டும் கிரயம் பெற்றார் என்றும் அந்த சொத்தைதான் அவர் எனக்கு தானம் கொடுத்தார் என்றும் சொன்னால் என் தாயார் 4.17 செண்ட் கிரயம் பெற்றார். மீதம் உள்ள 4-1/2 செண்ட் என் தாயார் கிரயம் பெற்ற சொத்திற்கு அடுத்து உள்ளது என்றால் இருக்கலாம். என் தாயார் கிரயம் பெற்றபோது வாதிகள் அனைவரும் இளவர் என்பது சரிதான். வாதிகளின் தந்தை இறந்தபிறகு வாதிகளை பராமரிக்க அவர்களது தாயார் சிரமபட்டார் என்றால் இருக்கலாம். அதனால் வாதிகள் சிறுவயதிலேயே வெளியூருக்கு சென்றுவிட்டனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகள் வெளியூரிலே வசித்து வேலை பார்த்தனர் என்றால் அது விவரமும் எனக்கு தெரியாது. வாதிகள் இளவராக இருந்தபோது அவர்களது பாதுகாவலர் என 1-ம் பிரதிவாதியை காட்டி என் தாயார் கிரயம் பெற்றது செல்லாது என்றால் அது சரியல்ல.

என் தாயார் கிரயத்தின்படி அவர் பெயருக்கு பட்டா மாறவில்லை ஆனால் எனக்கு எழுதிக்கொடுத்த தானபத்திரப்படி என் பெயருக்கு பட்டா மாறிவுள்ளது. வழக்கு சொத்தில் வாதிகள் கோரியபடி அவர்களுக்கு பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கது என்றும் அதனை நான் ஆட்சேபிக்க இயலாது என்றும் சொன்னால் அது சரியல்ல.